


மதுரையில் 'நேத்ராவதி வலி நிவாரணம் மற்றும் மறுவாழ்வு' மைய விழாவில், கேரளா போக்குவரத்து துறை நிர்வாக இயக்குனர் ராஜமாணிக்கம் பேசினார். இடமிருந்து வடக்கு ரோட்டரி தலைவர் இளஞ்செழியன், ஜலஜா, ஜனார்த்தனன்.

# உதவும் எண்ணம் இருந்தால் அனைவரும் உறவினர்களே

புதூர், பிப். 21–

கடச்சனேந்தல் ஐஸ்வர்யம் டிரஸ்ட் சார்பில் இயங்கும் 'நேத்ராவதி வலி நிவாரணம் மற்றும் மறுவாழ்வு' மையத்தின் ஆண்டு விழா நடந்தது.

அரவிந்த் கண் மருத்துவமனை டாக்டர் துள சிராஜ் தலைமை வகித்தார். ஜனார்த்தனன், ஜலஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். மைய நிர்வாக இயக்குனர் டாக்டர் பாலகுருசாமி வரவேற்றார்.

கேரளா போக்குவரத்து துறை நிர்வாக இயக்குனர் ராஜமாணிக்கம் பேசியதாவது: மனிதர்களின் மனம் தற்போது சுருங்கி விட்டது. மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் பலருக்கு இல்லை. இந்த எண்ணம் இருந்தால் அனைவரும் நமது உறவினர்களே.

உதவி என்பது பணம், பொருள் கொடுப்பது மட்டுமே அல்ல. ஆதரவற்றோருக்கு நம்மால் முடிந்த உழைப்பை கொடுத்தாலே உதவியாகும்.

அதுபோல் உருவான இந்த அமைப்பு ரோடு, தெரு ஓரங்களில் ஆதரவற்ற நிலையில் உயிருக்கு போராடியவர்களை காப்பாற்றி பராமரித்து வருகின்றனர். இவர்களின் உழைப்பால் இன்னும் சில ஆண்டுகளில் ரோட்டில் அனாதையாக, ஆதரவில்லாமல் தவிப்பவர்களின் எண்ணிக்கை குறைந்து விடும், என்றார்.

டாக்டர் பாலகுருசாமி பேசியதாவது:

நேத்ராவதி வலி நிவாரணம் மற்றும் மறுவாழ்வு மையத்தில் 100க்கும் மேற்பட்டோர் பராமரிக்கப்பட்டு பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். தற்போது நோயால் பாதிக்கப்பட்ட, முதியோர் 18 பேர் உள்ளனர். இங்கு முதியோர் மட்டுமல்ல அனாதைகளாக ரோட்டில் தவிக்கும் அனைவரையும் அழைத்து வந்து பராமரிக்கிறோம், என்றார்.

முன்னாள் ராணுவ வீரர்கள் சேமநல உதவி இயக்குனர் பிரபாகரன், எழுத்தாளர் இந்திரா சவுந்தரராஜன், வடக்கு ரோட்டரி கிளப் தலைவர் இளஞ்செழியன், செயலர் செந்தில் குமார், மறுவாழ்வு மைய டாக்டர்கள் அமுத நிலவன், சபரிமணிகண்டன், வெங்கடேஷ், ஸ்ரீவித்யா, ரம்யா உட்பட பலர் கலந்து கொண்டனர்.